

கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி. ஆர். பாலு எம்.பி. யின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா, செல்வகுமாரின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் எஸ். திருநாவுக்கரசு, சி.கே.பெருமாள், ஜி.தமிழ்ச்செல்வன், கராத்தே ரவி மாநில பொது குழு உறுப்பினர், மன்சூர்அலி ஆகியோர் நேரில் வந்து அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# அமெரிக்க அதிபர் டிரம்பிடம் - மீண்டும் அடிபணிந்த மோடி!

**அ**மெரிக்காவின் இந்தியா மீதான 50% வரிவிதிப்பு, இந்திய ஏற்றுமதியின் முதுகெலும்பை முறிக்கும் அதிபர் டிரம்ப் அவர்களின் செயலை கை கட்டி வேடிக்கை பார்க்கும் ஒன்றிய மோடி அரசு!

கொங்கு மண்டலமாம், திருப்பூரின் வாழ்வாதாரமாக விளங்கும் , ஜவுளி ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பை, கண்டும் காணாமல் இருக்கும், ஒன்றிய "எஜமானர்களை" கண்டிக்க மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டுகோள் கூட விடுக்கத் தயங்கும் பழனிச்சாமி!!

அறிவார்ந்தவர்கள்

தேவை...அவை இல்லாதவர்கள் அல்ல!

'தேவை ஓர் Maran..

(Moron's) அல்ல' என்கிற தலைப்பில் சமூகவலைதள ஆர்வலர் விக்னேஷ் ஆனந்த் அவர்களின் டிவிட்டர் பதிவு வருமாறு:-



தமிழாக்கம்:
**வே. கௌதமன்,**
மாநிலத் துணை செயலாளர்,
கழக விளையாட்டு
மேம்பாட்டு அணி.

**இ**ந்தியாவின் ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சராக (1999-2002) இருந்த முரசொலி மாறன், சியாட்டிலிலும் (1999) தோஹாவிலும் (2001) நடந்த உலக வர்த்தக அமைப்பின் (WTO) மாநாடுகளில் குறிப்பி டத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி னார், இது இந்தியாவின் நிலைப்பாட்டை வலுப்படுத்தி, வளரும் நாடுகளின் நலன்களைப் பாதுகாத்தது.

அவரது முக்கிய சாதனைகளில் பின்வருவன அடங்கும்:

**வளரும் நாடுகளின் குரல்:** சியாட்டில் மாநாட்டில், வளர்ந்த நாடுகளின் ஒருதலைப்பட்ச வர்த்தகக் கொள்கைகளுக்கு (G7/G8) எதிராக வளரும் நாடுகளை ஒன்றிணைத்து, அவர்களின் வர்த்தக உரிமைகளை வலியுறுத்தினார். தோஹாவில், அவர் WTO ஒப்பந்த ஏற்றத்தாழ்வுகளை சவால் செய்தார், வளரும் நாடுகளின் குரல்களுக்கு முன்னுரிமை அளித்தார், அவர்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்தினார் மற்றும் விவசாயம், தொழில் மற்றும் அறிவுசார் சொத்துரிமை களில் (IPR) பேரம் பேசும் சக்தியை மேம்படுத்தினார்.

**விவசாய மானியங்களுக்கு எதிர்ப்பு:** வளர்ந்த நாடுகளின் விவசாய மானியங்கள் மற்றும் வர்த்தகத்தை சிதைக்கும் நடைமுறைகளை மாறன் எதிர்த்தார், இது வளரும் நாடுகளில் விவசாயிகளுக்கு பாதகமாக இருந்தது. அவரது முயற்சிகள் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து விவசாயப் பொருட்களுக்கு நியாயமான சந்தை அணுகலைப் பெற்றுத் தந்தன.

**அறிவுசார் சொத்துரிமைகள் (IPR) மற்றும் மருந்துகளுக்கான அணுகல்:** உலக வர்த்தக அமைப்பின் TRIPS ஒப்பந்தத்தின் கீழ் காப்புரிமை விதிகளை தளர்த்துவதற்காகவும், மலிவு விலையில் மருந்து உற்பத்தியை செயல்படுத்துவதற்காகவும், வளரும் நாடுகளில் ஏழை மக்களுக்கு அணுகலை மேம்படுத்துவதற்காகவும் மாறன் வாதிட்டார்.

**உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தங்களின் மறுஆய்வு:** வளரும் நாடுகளுக்கு பாதகமான உருகுவே சுற்று ஒப்பந்த ங்களை மறுபரிசீலனை செய்ய அவர் வலியுறுத்தினார், அவை பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைக்கவும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு நெகிழ்வுத்தன்மையை வழங்கின.

**தோஹாவில் இந்தியாவின் தலைமை:** மாறன் இந்தியாவை வளரும் நாடுகளின் தலைவராக நிலைநிறுத்தினார், சீனாவின் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினரை ஆதரித்தார் மற்றும் வளர்ந்த நாடுகளின் பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கினார், மூன்றாம் உலக நாடுகளின் பேச்சுவார்த்தை சக்தியை வலுப்படுத்தினார்.

**மூன்றாம் உலக நாடுகளுக்கான நன்மைகள்:**

**நியாயமான வர்த்தக வாய்ப்புகள்**: மாறனின் முயற்சிகள் நியாயமான உலகளாவிய சந்தை போட்டியை உறுதி செய்தன.

**மருந்துகளுக்கான அணுகல்:** TRIPS தளர்வுகள் ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் மலிவு விலையில் மருந்து அணுகலை மேம்படுத்தின.

**வளரும் நாடுகளின் ஒற்றுமை:** அவரது தலைமை ஒரு வலுவான WTO கூட்டணியை வளர்த்தது, பேரம் பேசும் சக்தியை அதிகரித்தது.

**உள்நாட்டு தொழில்களின் பாதுகாப்பு:** அவரது கொள்கைகள் வளரும் நாடுகளுக்கு பொருளாதார சுயாட்சியைப் பாதுகாத்தன.

**தற்போது 2025 இல், தொலைநோக்கு பார்வை இல்லாத திறனற்ற ஒன்றிய அரசு, பேச்சுவார்த்தைத் திறன்கள் இல்லாமை மற்றும் ராஜதந்திரமின்மை காரணமாக பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கம் அமெரிக்க அதிபர் டிரம்பிற்கு மீண்டும் அடிபணிந்தது.**

# கொளத்தூர் தொகுதியில் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிப்பீர்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தல்!

சென்னை, செப். 4 -

கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார் பில் நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (03.09.2025) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, ரெட்டேரி சந்திப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் "குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்", கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் "மக்கள் சேவை மையம் (*Citizen Service Centre*)", கொளத்தூர் நவீன சந்தை (*Kolathur Modern Market*), பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் ராஜா தோட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் அருகில் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் ராஜா தோட்டம் பல்நோக்கு மையம், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் மின் மயானம் மற்றும் கொளத்தூரில் மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் தாங்கல் மின் மயானம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் ஆர்.பிரியா, முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் .எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ. தலைமைப் பொறியாளர் .மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு. பாலமுருகன், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (வடக்கு) ராஜசேகர் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஐசிஎப்.முரளிதரன், . சந்துரு, திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு. நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி. யோகப்பிரியா, திருமதி. ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### திரு.வி.க.நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர்

# செ.தமிழ்வேந்தன் தாயார் செ.முருகம்மாள் மறைவு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – அன்பகம் கலை - மேயர் பிரியா - கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, செப். 04

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அவர்களின் தாயார் செ. முருகம்மாள் (வயது 84) அவர்கள் நேற்று (03.09.2025 புதன்கிழமை) அதிகாலை 4.30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சசிகாந்த் செந்தில் எம்.பி, ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ஈரோடு இறைவன்,, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி , தா.இளைய அருணா, க. ஜெயராமன், இரா.கருணாநிதி, புனிதவதி எத்திராசன், தில்லைகதிரவன், ஆர். ராஜன், கினார் ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபோய், ஜி.கிருஷ்ணகுமார், மா.ருத்ர மூர்த்தி, வெ.இன்பா, க.எழிலன், சே.மணிமாறன் மற்றும் ஏராளமான கழக தோழர்கள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள், குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (04.09.2025 வியாழக்கிழமை) மாலை 3 மணி அளவில் சென்னை, வியாசர்பாடி, எம்.எம்.கார்டன், எண். 81 ல் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு பி.பி.ரோடு மேல்பட்டி பொன்னப்பன் தெரு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது

# திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் செ.முருகம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 4 -

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் திருமதி செ.முருகம்மாள் அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் திரு.வி.க நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அவர்களின் தாயார் திருமதி செ.முருகம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

அன்பு காட்டி, அரவணைத்து, ஆளாக்கிய அருமைத் தாயை இழந்து தவிக்கும் தமிழ்வேந்தன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 151 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Supply and Erection of SS316L pipelines and fittings in TG PHE common header pipelines in ACW system |
| 157 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Procurement of Cast Basalt lined MS Pipes having flange at one end and other end plain |
| 199 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | 5 Ton capacity electric wire rope Hoist for instrument air compressor at compressor side |
| 200 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | Titanium channel plate with Nitrile rubber gaskets for M30 Model Plate Heat Exchanger 3C in Unit-II |
| 201 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | Ton capacity Electrically operated hoist with steel wire rope complete set |
| 203 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | Constant load hanger assembly for main steam line |
| 204 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | ACTUATORS WITH GEAR BOX FOR ID FAN BFE SCOOP |
| 205 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | SS 316L Mixing Apparatus 550 mm Dia |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/4891/ஒப்பந்தப்புள்ளி/2025**




திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு ஒன்றியத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வி.ஜி. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் அதிகாரிகள் மலர்விழி, ஜே. மாணிக்கம், பிரபாவதகள் ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், சி.ஜெயபாரதி, ஜி.ரமேஷ், ஏ.பி.செந்தில்குமார், பி.சரவணன், கிளை செயலாளர்கள் சம்பத், சுப்பிரமணி, விடியல் நாராயணன், அத்திப்பட்டு சிவா உள்ளிட்ட ஏராளமான கழக நி ர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனை வருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



கழகச் சட்டத்துறை இணைச் செய லாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, தட்டான்குளம், பழைய ஆட்டுத்தொட்டி தெரு விலுள்ள மாநாகராட்சி விளை யாட்டு மைதானத்தில் நேற்று நடை பெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமைத் தொடங்கி வைத்து, மனுக்களை அளிக்க வந்த பொது மக்களிடம் அவர்களின் கோரிக்கை கள் குறித்துக் கலந்துரையாடினார். இம்முகாமில் அதிகாரிகள் சரவ ணன், ஹரிபாபு, சக்திவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர். புருஷோத்தமன், வெ.மருதன், மு. கமலக்கண்ணன், மா.காந்தி, ஜெ. சிலம்பரசன், டி.விஸ்வநாதன், ஆர்.ஆரோக்கியம், கவிதா, கோமகன், முத்து, கார்த்திகேயன், கே.பி.பார்க் சதீஷ், ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.



125வது வட்டத்தில் பொதுமக்கள் குறை தீர்க்கும் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம் சாந்தோம் மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில் நடைபெற்றது. இதில் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முகாமினை துவக்கி வைத்தார். உடன் மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, வட்ட கழக செயலாளர்கள் அ.தவநேசன், வே.வெற்றிவேல், எ. தாஸ், மா.பா. அன்பு துரை, பார்த்திபன், பா.பொன்னுசாமி, பகுதி கழக துணை செயலாளர்கள் எ.குமாரி, சீமென் சேகர் மற்றும் அனைத்து அரசு மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


# கண்ணீர் அஞ்சலி



தெய்வதிரு.**அ.செல்லப்பன்** அவர்களின் மனைவியும்
சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி செயலாளர்
**செ.தமிழ்வேந்தன்** அவர்களின் தாயாருமான

திருமதி
# செ.முருகம்மாள்
(வயது - 84)

அவர்கள் இன்று (03 - 09 - 2025) புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இயற்கை எய்தினார். அவரது இறுதி ஊர்வலம் நாளை (04-09-2025) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் சென்னை, வியாசர்பாடி, எம்.எம்.கார்டன், எண்.81ல் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு பி.பி.ரோடு மேல்பட்டி பொன்னப்பன் தெரு மயானத்தில் நல்லடக்கம் செய்யபடும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருத்தத்துடன்
**குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்**